பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 121 27—10—1995
இதழ்: 21 விலை ரூபா 5-00

PERIODICALS DIVISION
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## யாழ்ப்பாணத்தில் "அசிபா" கருத்தரங்கு

கண்டியில் அண்மையில் நடந்த ''அசிபா'' (ASIPA) பட்டறை பற்றிய விபரங்களை அறிமுகம் செய்யும் நோக்குடன், ஒக்டோபர் 26ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்கோட்டக் குருக்களுக்கும், ஒக்டோபர் 30ஆம் திகதி திங்கட்கிழமை மானிப்பாய் பருத்தித்துறைக் கோட்டங்களின் குருக்களுக்கும், காலை 9.00 மணி தொடக்கம் 12.45 மணி வரை ஒரு கருத்துப்பரிமாறல் ஆயர் இல்லத்தில் இடம்பெறும். சகல குருக்களையும் இதில் பங்குபற்றுமாறு யாழ். ஆயர் வேண்டிக் கொள்கின்றார்.

துறவியர் — கன்னியர்களுக்கு இக்கருத்தரங்கு நவம்பரில் இடம்பெறும்.

✱ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✱

# இராணுவ ஆக்கிரமிப்பினால் மேலும் ஐந்து பங்குகள் பாதிப்பு

**யாழ். குடாநாட்டில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளின்போது மேற்கொள்ளப்படும் மிலேச்சத்தனமான கொடூர விமானக் குண்டுவீச்சுகளினாலும், ஓயாத கண்மூடித்தனமான பயங்கர எறிகணைத்தாக்குதல்களினாலும், பல்லாயிரக் கணக்கான அப்பாவிமக்கள் தங்கள் வதிவிடங்களை விட்டு வெளியேறியதன் காரணமாக, யாழ். மறைமாவட்டத்தின் மேலும் ஐந்து பங்குகள் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.**

பலாலி இராணுவ முகாமில் குவிக்கப்பட்ட 50 ஆயிரம் சிறீலங்கா இராணுவப் படையினர் கட்டம்கட்டமாக இற்றை வரை மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் ஏழாலை, சுண்ணாகம், அச்சுவேலி, உரும்பிராய், கோப்பாய் ஆகிய ஐந்து பங்குகளிலிருந்து மக்கள் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம் பெயர்ந்த மக்களின் ஆன்ம - சரீர நலன்களைக் கவனிப்பதற்காக இடம் பெயர்ந்த பங்குக் குருக்கள் இடம் பெயர்ந்த மக்கள் வதியும் இடங்களில் பணியாற்ற யாழ் ஆயர் இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை புதிய தற்காலிக பணித்தளங்களை வெவ்வேறு பிரதேசங்களில் உருவாக்கியுள்ளார். இதன்பிரகாரம் அருள்தந்தை யோண் A. பிரான்சிஸ் o.m.i. நாவற்குழியிலும், அருள்தந்தை M. யேசுரத்தினம் மட்டுவிலிலும் அருள்தந்தை அன்ரனிதாஸ் முகமாலையிலும் இடம்பெயர்ந்தோர் மத்தியில் பணியாற்றுகின்றனர்.

## ஆசிரியர் தங்கள் பங்களிப்பை திருச்சபைக்கு நல்க வேண்டும்

✱ யாழ் ஆயர்

கத்தோலிக்க ஆசிரியர்கள் அன்று ஒன்றுகூடி சகோதரத்துவத்தையும் ஒருமைப் பாட்டையும் காட்டியதற்கு தனது பாராட்டைத் தெரிவித்த யாழ் ஆயர்தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை, எதிர்கால கத்தோலிக்க சமூகத்தின் முன்னேற்றத்தை முன்னிட்டு ஆசிரியர்கள் தொடர்ந்து கல்விப் பயிற்சிகளில் ஈடுபட்டு தங்கள் ஆளுமையை வளர்த்து அதிபர் பதவிக்கான தரத்தைப் பெற்று திருச்சபைக்கு தங்கள் பங்களிப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கடந்த ஞாயிறு, ஒக்ரோபர்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

### அனைத்துலக ஆசிரியர் தின விழாவில்

## கல்விச் சிந்தனையாளரை உருவாக்க வேண்டும்

★ சா. ம. செல்வரத்தினம், அ.ம.தி, அடிகளார்

யாழ் மறைக்கல்வி நிலையத்தில் கடந்த ஞாயிறு அன்று 150க்கு மேலான யாழ் மறை மாவட்டஆசிரியர்கள் மத்தியில் பிரதம உரையாளராக அருள் தந்தை சா. ம. செல்வரத்தினம் அ. ம. தி. சிந்தனையூட்டும் சிறப்புரை ஒன்று வழங்கினார்.

கல்வி போட்டியையும் அறிவுத் திமிரையும் வளர்க்காது, அன்பை வளர்த்து, எமது சமுதாயத்தில் சிந்தனையாளரை உருவாக்கவேண்டுமென்று அடிகளார் கூறினார்.

மேலும், அறிவும் உணர்வும் இணையும்போதுதான் ஆன்மீ

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

### யாழ் அடைக்கல அன்னைப் பங்கின்

## மகா ஞான ஒடுக்கத்தின் நிறைவு

பங்குனி மாதம் 5ஆம் திகதி யாழ் அடைக்கல அன்னைப் பங்குத்தந்தை J. நீக்கலஸ் அடிகளார் தீட்டிய ஆறுமாத மகா ஞான ஒடுக்கத்திட்டம் உருவெடுத்தது. பங்கு பத்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொன்றின் இணைப்பாளர்களினதும் குழுக்களினதும் துரித செயற்பாட்டால்பங்கின் சகல மூலை முடுக்குகளிலும் ஒரு எழுச்சியும் விழிப்புணர்வும் காணப்பட்டது.

வலைய மக்கள் அனைவரும் இணைந்து செபிக்கக்கூடியதாக பொது வழிபாடு ஒழுங்கு செய்யப்பட்டது. மையப் பொருளை விளங்கிக்கொள்ளக்கூடியதாகிய உரையாடல் அல்லது சிறு நாடகம், இறைவார்த்தை வாசிணையின்பின் பகிர்தல், மறை உரை,

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

### அமலமரி அன்னையின்

## புதிய குரு றொபேட்



அருட்செல்வன்
றொபேட் பெரேரா, o. m. i.

இவர் 25-10-95இல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் பேரருள்திரு இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களால் அமலமரித் தியாகிகளின் சபையில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பேசாலை பத்திமா மகாவித்தியாலயத்திலும் புனித பத்திரிசியார் கல்லூரியிலும், கொழும்புத்துறை புனித வளனார் குருமடத்திலும் பயின்றார். மெய்யியலை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் இறையியலை கண்டி, அம்பிட்டியா குருமடத்திலும் கற்று முடித்தார். ''ஏழைகளுக்கு நற்செய்தி நவில்வது எமது பணி''

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

பேசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனி பெரேரா தம்பதியரின் தவப் புதல்வனாவார்.

## நாகர் கோவில் குண்டுவீச்சு நிகழ்ந்த இடத்தில் இரங்கல் பலி

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் 25க்கு மேற்பட்ட பிஞ்சு உள்ளங்கள் பிய்ந்து சிதறிய 31ஆம் நினைவு நாளிலே சம்பவம் நிகழ்ந்த இடத்தில் இறந்த உள்ளங்கள் இறைவனில் இளைப்பாறவும், காயம் அடைந்தோர் நலமடையவும், இழந்தவர்கள் ஆறுதல் பெறவும் வரம் வேண்டி அருள்திரு. S. H. ஜெபநேசன் அடிகள் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## சொந்த மண்ணில் நன்றிப் பலி

தாளையடியின் முதற் குருவும், தனது குருத்துவ வெள்ளி விழாவை நினைவு கூருபவருமான புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருள்திரு A. I. பேனாட் அடிகள் கடந்த ஞாயிறு (22-10-95) மாலை 5-00 மணிக்கு தமது சொந்த மண்ணிலே இறைவனுக்கு நன்றிகூறி திருப்பலி ஒப்புக் கொடுத்தார். தம் பணிக்கு அழைத்த இறைவன், கடந்த 25 ஆண்டுகளும் அவர்கூட வழி நடந்துவந்த தயவினை நினைவு கூர்ந்து அவர் தனது சக குருக்கள், பங்கு மக்களுடன் இணைந்து இறைவனுக்கு நன்றிகூறி ஒப்புக் கொடுத்த திருப்பலியிலே, அவராலே உருவாக்கப்பட்டு தற்போது அவர் கூடவேம் இணைந்து பணியாற்று

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## நாட்டுக் கூத்து பிரதி வழங்கல்

ஐப்பசித் திங்கள் 9ஆம் நாள் திங்கட்கிழமை திருமறைக்கலாமன்ற கேட்போர் கூடத்தில் பாஷையூர்ப் புலவர் ஆ. செகராசசிங்கம் அவர்களால் இயற்றப்பெற்ற குருமுனி ''யோசேவ் வாஸ்'' நாட்டுக்கூத்துப் பிரதி வழங்கும் வைபவம் நடைபெற்றது.

திரு. ஏ. ஜே. அன்டர்சன் அவர்களின் வரவேற்புரையை அடுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஜே. பீ. ஈ செல்வராஜா அடி

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## வன்னிப் பெருநிலத்தில் கருத்தரங்கு

கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் சென்றமாதம் 13ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை திருவழிபாட்டுக் கருத்தரங்குகள் இடம் பெற்றன. யாழ் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக் குழுவின் இயக்குநர் யே. நிக்கலஸ் அடிகளாரும் செயலர் திரு. இ. ம. ஜெயசீலனும், அவர்களுடன் கிளி / மறைக்கோட்ட திருவழிபாட்டுப் பொறுப்பாளர் ஜே. மவுலிஸ் அடிகளார்,

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## அல்லாரைப் பங்கில் பெருவிழா

அல்லாரை என்னும் அமைதியான சூழலில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் புனித செபமாலை அன்னையின் பெருவிழா ஐப்பசி 7ஆம் நாள் பங்குத்தந்தை பீற்றர் துரைரட்ணம் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## சாவு வாழ்வதற்கே!

சாவுகளை நாம் நாளாந்தம் சந்திக்கின்றோம். கோவிலில் தஞ்சமடைந்த அப்பாவி மக்களின் சாவு; பள்ளியில் படிக்கவந்த பச்சிளம் பிள்ளைகளின் சாவு; பதுங்கு குழியில் பாதுகாப்படைந்த குடும்பத்தினரின் சாவு. இன்னும், மிலேச்சத்தனமான குண்டுவீச்சினால் கொலை; கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலினால் கொலை; பயங்கர ஆயுதங்களினால் கொலை. நகர்ப்புறங்களிலும் கிராமங்களிலும், வடக்கிலும் தெற்கிலும், கிழக்கிலும் மேற்கிலும், சாவு. குழந்தைகள், இளைஞர் யுவதிகள், முதியோர், வயோதிபர் எனும் சகல தரப்பினரும் சாவுக்குள்ளாகின்றனர்.

ஒரு சிலர் ஓர் இலட்சியத்திற்காகத் தங்கள் உயிரை அர்ப்பணித்துச் சாவைத் தழுவுகின்றனர். வேறு சிலர் விரும்பியோ விரும்பாமலோ சாவை ஏற்றுக்கொள்ளுகின்றனர். இன்னும் சிலர் இயற்கை விதியால் சாவெய்துகின்றனர். மற்றும் பெரும்பாலானோர் காத்திராப்பிரகாரமான செயல்களால் சாவுக்குள்ளாகின்றனர்.

இச்சாவுகளெல்லாம் ஒரு சாதாரண நாளாந்த நிகழ்வாக மாறிவிட்டதனால் சாவின் மறைபொருளைப் பற்றி நாம் ஆழமாய்ச் சிந்திக்கத் தவறுகின்றோம். மனிதனின் சிறந்த மாண்பையும், உயர்ந்த மதிப்பையும் மறந்துவிடுகிறோம்.

நாம் அன்புசெய்யும் ஒருவர் சாவின் பிடியில் சரணடையும்பொழுதுதான் சாவு நம்மைத் தொடுகின்றது அதுமட்டும் சாவோர் யாரோ, நாம் யாரோ என்றவாறாய் வாழ்கிறோம். போரின் அனர்த்தங்களினால் காயப்பட்டு, குருதி சிந்தி, சாவின் பிடியில் இருப்பவர்களையும் கூட நாம் கருத்தில் கொள்வதில்லை. அவர்களின் ஆன்ம சரீர நலன்களுக்காக உதவிக்கரம் நீட்டவோ, இரத்ததானம் செய்யவோ நாம் தயங்குகிறோம். வேதாகமத்தில் கூறப்படும் குருவும், லேவியனும் போல் அல்லாது, நல்ல சமாரித்தன் போன்று காயங்களைக் கட்டி, சாவடிக்குக் கொண்டுபோய்த் துன்புற்றோரைக் கண்காணிக்க நாம் முன்வரவேண்டும்.

சாவு நாம் எல்லோரும் எதிர்பார்க்கவேண்டிய ஒரு நிகழ்வு. சாவைப் போன்று இயற்கையானதும், அவசியமானதும், தவிர்க்க முடியாததுமானதொன்று மனிதனுக்குத் தீமையானதாக இருக்கமுடியாது. சாவு மறுமையின் மகிமைக்கு நம்மைப் பாத்திரராக்குகிறது.

நித்தியத்தின் வாயிலைத் திறக்கும் சாவிதான் சாவு. அது மகிமையின் வாசல். நாம் ஒருபொழுது சாவது அதன்பின் சாகாமலிருப்பதற்கே. இவ்வுலகமோ சாவோரின் பூமி; மறுவுலகமோ வாழ்வோரின் அரசு — தரிசன பூமி.

சாவு ஓர் அழிவல்ல; அது ஒரு மீட்பு. சாவு ஒரு இழப்பல்ல; அது ஒரு இலாபம். சாவு ஒரு பிரிவல்ல; அது ஒரு சந்திப்பு. சாவு ஓர் உறக்கமல்ல; அஃது ஓர் இறுதி விழிப்பு. சாவு புறப்படுதலல்ல; அது வந்தடைதல்.

வாழப்பிறந்த மனிதன் சாவைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. இங்கு நாம் அறிந்தவைகளில் மிகப் பயங்கரமானது சாவாகத் தோன்றலாம். ஆனால் சாவின் மெய்மையை நாம் சுவைத்தால்தான், நமக்கு அது நமது பிறப்பாகவும், மீட்பாகவும், ஒரு புதிய படைப்பாகவும் இருக்கும். அச்சமூட்டும் புயலுக்குப் பின் அமைதி தோன்றுவது போன்று, கொடிய துன்பங்களுக்குப்பின் சுவையான இன்பம் ஏற்படுகின்றது.

என்றுமே இவ்வுலகில் உயிர் வாழவேண்டுமென்னும் எதிர்பார்ப்பு நமக்கு இருக்குமேயானால், அவ்வாறான வாழ்வு நம்மை அவநம்பிக்கையின் விளிம்புக்குத்தான் இட்டுச் செல்லும். ஏனெனில் வாழ்வில் நாம் அன்றாடம் சந்திக்கும் துன்பங்கள், துயரங்கள், ஏக்கங்கள்,ஏமாற்றங்கள் நம்மை வருத்தத்தில் ஆழ்த்துவது மட்டுமல்லாமல், நம்மை ஒரு விரக்தி நிலைக்குத் தள்ளிவிடுகின்றது. அந்நிலையிலிருந்து விடுபடவேண்டுமாயின் விசுவாச ஒளி தேவையாகின்றது.

சாகவேண்டுமெனும் நியதி நம்மை வருத்தத்தில் ஆழ்த்தினாலும் முடிவில்லா வாழ்வின் முடி ஒன்று நம்மைக் காத்திருக்கின்றதென்பது கிறிஸ்துவின் நற்செய்தி. எனவே சாவு மணி அடிக்கும்போது நம்பிக்கையூட்டும் கிறிஸ்துவின் அழைப்புக் குரல் கேட்கவேண்டும்: ''வாருங்கள், என் தந்தையின் ஆசிபெற்றவர்களே, உலகம் தோன்றிய முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகுக.'' (மத் 26 : 34).

# ஆயிரம் மௌன ஆண்டுகள்

★ J. E. ஜெயசீலன் அடிகளார்

யாழ்ப்பாண வரலாற்றின் நிகழ்வுகளை சற்றுபின்நோக்கி பார்க்குமிடத்து, கிறிஸ்து சகாப்தத்தின் முதல் ஐந்து நூற்றாண்டுகளில் நிழல்போல பின்தொடர்ந்து வந்த கிறிஸ்தவ சமயம் பின் வந்த பத்து நூற்றாண்டுகளில் அறியப்படாமல், மறைந்துபட்ட நிலையில் ஒரு முற்றுப்புள்ளியைக் கொண்டதாக நிகழ்வதை அவதானிக்க முடிகின்றது.

கந்தரோடையை முக்கிய நகராகக் கொண்ட யாழ்ப்பாணத்து பழைய வரலாறு 5ஆம் நூற்றாண்டு ரோம சாம்ராச்சிய விழ்ச்சியுடனும் அதன் வாணிபம் தொடர்புகள் அறுந்த நிலையில் தனது முக்கியத்துவத்தை இழந்துவிடுகின்றது. 6ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அனுராதபுரத்தை மையமாகவும், இராசதானியாகவும் கொண்ட ஓர் சிங்கள அரசு முக்கியத்துவம் பெறுவதை அறியமுடிகின்றது. இதன் பின்னணியில் பௌத்த சமயத்தின் செல்வாக்கு வளர்ச்சியடைகின்றது. இவ்வரசின் கடல்வழி நுழைவாயில்களான மாந்தையும், இயற்கைத் துறைமுகமான திருகோணமலையும் முக்கியத்துவம் பெறுகின்றன. பின்னர் படிப்படியாக ஏற்பட்ட சைவ சமய எழுச்சியுடன் இவை இரண்டும் பாடல் பெற்றவையாக புகழ்பூத்த திருத்தலங்களாக தேவாரங்களில் பாடப் பெற்றுள்ளமை அக்காலத் தமிழ் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பை ஓரளவு ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. இதே காலத்தை ஒட்டி 'கருங்கல்லில் பொறித்த சிலுவையும் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டமையும், அனுராதபுர அரசின் அக்காலத்தில் முக்கியத்துவத்தை எடுத்தியம்புவதாக உள்ளது.

இலங்கை நாட்டின் கேந்திர முக்கியத்துவமான இடமாக அனுராதபுரம் அமைந்துள்ளது. இங்கிருந்தே பௌத்த சமயத்தின் எழுச்சியும், வளர்ச்சியும், சிறப்புற்றதை 6ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளப்படும் 'மகாவம்சம்' என்ற வரலாற்று நூல் எடுத்தியம்புகின்றது. எனவே இத்தகைய

ஒரு பின்னணியில் சூழலில் கிறிஸ்தவம் வளர்ச்சி பெற்றிருக்கமுடியாது. அதுவுமல்லாமல் புகழ்பூத்த யாழ்ப்பாணத்தின் தனித்துவமும் இக்காலப் பகுதியில் மங்கிப் போயிற்று. சோழப் பேரரசின் படையெடுப்பால் அனுராதபுர, பொலனறுவை இராட்சியங்கள் வீழ்ச்சியடைய நல்லூர் இராசதானி முனைவிடத் தொடங்குகின்றது. யாழ்ப்பாணத்தின் சிறப்பு சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்திலேயே மீண்டும் முக்கியத்துவமும், பெருமையும் பெறத் தொடங்குகின்றது. இக்காலப் பகுதியில் நிலவி வந்த பௌத்தம், சமணம் யாழ்ப்பாணத்தில் சைவசமயம் பெற்றிருந்த வளர்ச்சியினால், வீழ்ச்சியுறுவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தில் ஐயனார் கோவில்கள் வழிபட்டு வருவதையும், புத்தருடைய உருவச்சிலைகள் ஐயனாராக உருமாற்றம் பெற்றமையையும் அகழ்வாராச்சி சான்றுகளினால் கலாநிதி. ரகுபதி அவர்கள் தனது (Early Settlement in Jaffna) என்ற நூலில் பக்கம் 185இல் குறிப்பிட்டுள்ளார்கள்.

வலுவிழந்த சிங்கள அரசு ஒருபுறமும், தளர்ச்சியடைந்த தென் இந்திய சோழஅரசும், பாண்டியபேரரசும் மறுபுறத்தில் கோலோச்சிய 13ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஓர் 'தமிழ்சைவ' அரசு உருவாவதற்கு, காரணிகளாயின. இந்த அரசின் கட்டுக்கோப்பை நிலைநிறுத்த சோழ மண்டல வேளாளர் யாழ்ப்பாணத்தில் குடியேறி தமது பங்களிப்பை நல்கினர்.

இத்தகைய சரித்திர முக்கியத்துவமான நிகழ்வுகளே, ஒரு நீண்ட இடைவெளியில் கிறிஸ்தவம் தொக்கி

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை

11. அறிவிலியுடன் விவாதம் செய்யாமல் வாயை மூடிக்கொள்.
12. நம்மை ஏசக்கூடியவர்களையும், பாராட்டக் கூடியவர்களையும் ஒரேநிலையில் நடத்தவேண்டும்.
13. முதியோரை மதித்துநட. ஆனால் உன்னை அவமதிக்க நடவாதே.
14. பணம் உண்டு என எண்ணி கர்வம் கொள்ளாதே. உன் பண்பு மழுங்கிப் போகும் அதனாலே.
15. பதவி மோகம் கொள்ளாதே. நல்ல உள்ளங்களை நீ இழப்பாய் பின்னாலே.

ஆக்கம்: க. அருள்நேசன், குருநகர்

## ★ மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 39. இடம்பெயர் அவலம்

1. இடம்பெயர் அவலம், இன்று முதன்மையானதொரு சமூகப் பிரச்சனையாகும். ஓர் இரவுக்குள் பல்லாயிரக் கணக்கில் தம் பாரம்பரிய இருப்பிடங்களை விட்டு மக்கள் இடம்பெயரும் நிர்ப்பந்தம், 'இனித் தாங்க முடியாது' எனும் விதமாய் அதிகரித்துள்ளது.

   'பதியெழு அறியாப் பழங்குடி வாழ்க்கை, பரதேசிகளாய் போச்சு போச்சு' என்றவாறு, சொந்த நாட்டிலேயே ஏதிலிகளாகும் பல்லாயிரக் கணக்கான மக்களின் துயரம் — சொல்லில் அடங்காதது.

   கடந்த காலத்து இடம் பெயர்ந்தோர் முகாம்களின் நலன்களை கவனிப்பதிலேயே மட்டுப்பாடுகளை எதிர்கொண்ட வேளையில், அண்மைய கொடுமைகளால் இடம் பெயர்ந்தோர் நிலை மேலும் மோசமாகும்.

   இதுவரை கால 'பொருளாதார தடை' உச்சமென, அடிப்படை உணவுப் பொருட்களின் கையிருப்பும் அருந்தலாகிய செய்தி, இன்னும் இவர் அவலத்தை அதிகரிக்கும்.

2. இடம் பெயர் வாழ்வில், வெறும் சோறும், பாணும் மட்டுமா பிரச்சனைகள் — அடிப்படை மருத்துவ வசதிகளிலிருந்து குழந்தைகள் கல்வி, முதியோர் பராமரிப்பு, குடும்பவாழ்வு என எல்லாமே கேள்வியாகும் —

   'நாகரிகத்தின் பெயரால்', 'சமாதானத்தின் பெயரால்' என்று இந்த துயரவாழ்வினை நியாயப்படுத்தும் பொய்மைகள் ஐ. நா. உள்விட்ட உலக அரங்கில் முன்வைக்கப்படுவது இனியும் இவை தொடரும் அவலத்தின் குறிகாட்டியாகும்.

3. 'பதியெழு அறியாப் பழங்குடி வாழ்க்கை' என அன்று சிலப்பதிகாரம் சொன்ன இயல் நிலை வாழ்வின் மீட்சி, எமது விழிப்புணர்வின் வழியது. மனிதாபிமானமற்ற, கொடிய ஆக்கிரமிப்புக் கெதிரான மக்கள் எழுச்சியே, சமாதானமான, இயல்வாழ்வை மீட்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் அரங்கம் 9

சிறுகதை

## சிதைவுகள்

அந்திசாயும் வேளை தென்றல் காற்று அனைவரையும் மென்மையாகத் தழுவிச் சென்றது. பறவைகள் மிருகங்கள் தம் இல்லிடங்களை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கும்வேளை பிரதீப்பின் பார்வையானது எங்கோ நிலை குத்திக் காணப்பட்டது. ஆம் தூரத்தே ஒரு கன்று துள்ளிக் குதித்து தாயிடம் பால் அருந்திக் கொண்டிருந்தது. அவனின் கண்களிலிருந்து நீர் வடிய அவனின் சிந்தனைகள் பின்னோக்கி சிறகடித்துச் சென்றன.

பிரதீப் இன்று பெற்றோர் இருந்தும் அநாதையாக வீதி வீதியாக பிச்சை எடுக்கும் ஒரு சிறுவனானான். அவனுக்கு தாய்ப்பாசம் என்பதே என்னவென்று தெரியாது. பசியின் கொடுமையில் தாயின் இல்லம் சென்று பிச்சை கேட்கும் அவல நிலையும் அவனுக்குண்டு.

பிரதீப் சமூகத்தால் புறம் தள்ளப்படும் ஒரு சிறுவனாக உள்ளான். அவன் பார்வைக்கு அவலட்சணமாகவும் அருவருப்பாகவும் காணப்படுகிறான். அவனது கண்கள் தீப்பிழம்பு போல் சிவந்திருப்பதுடன் தோல்களும் எரிகாயங்கள் போலவும், தலையிலே புண்கள் போன்று மொட்டைத் தலையுடன் காணப்படுகிறான். பிரதீப்பைக் கண்டால் குழந்தைகள் பயத்தினால் அழுகின்றனர். சிறுவர்கள் அவனைக் கல்லால் எறிந்து துரத்துகின்றனர். பெரியவர்கள் அருவருப்புடன் வெறுத்து ஒதுக்குகின்றனர். இத்தனைக்கும் அவன் செய்த பாவம் என்ன? ஒன்றுமே அறியாத இக்குழந்தை இன்று சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு அருவருக்கப்பட்டு வெறுக்கப்படுவதற்குக் காரணம் என்ன? இது இவள் செய்த பாவமா?

எனினும் பிரதீபன் தன்னை அனைவரும் வெறுத்து ஒதுக்கினாலும் வீதியில் பாடிய வண்ணம் திரிகிறான். சிறுவர்கள் ஓடிவிளையாடும்போது அவன் விளையாட்டு உந்தலால் அவர்களை நாடிச்செல்கிறான். சிறுவர்கள் அவனை ஏற்காது ''ஏ, முட்டாள் நாங்கள் உன்னை விளையாட சேர்க்கமாட்டோம். உன்னைப்பார்க்க அருவருப்பாக இருக்கின்றது'' என அவனை அடித்துத் தள்ளினர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பலவாறு பிரதீப் மற்றவர்களால் துன்புறுத்தப்பட்டு அவமதிக்கப்பட்டதாலும் இன்று அவன் ஒரு மூலையில் அழுது கொண்டிருந்தான். நீண்ட நேரமாக அவன் ஒரு மூலையில் அழுதுகொண்டிருப்பதை அவதானித்த ஒரு முதியவர் அவனருகில் செல்ல அருவருப்புக் கொண்டாலும் ஏதோ உந்துதலால் அவனருகில் சென்று பிரதீப்பின் அழுகைக்கான காரணத்தைக் கேட்கிறார். பிரதீப் தனக்கு சிறுவர்களால்ஏற்பட்ட அவமதிப்பைக் கூறி நான் இவ்வாறு பிறந்ததற்கான காரணம் என்ன என்ற வினாவை எழுப்பி பதிலை மிக ஆதங்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

★ எழிலரசி - பாசையூர்

முதியவர் எவ்வாறு அவனுக்கு நிகழ்ந்திருந்த கொடுமையை கூறுவார்? அவன்வயிற்றில் இருக்கும்போது அவனது தாய் பாவித்த கருத்தடை மருந்தே கருவைக் கலைக்காது இத்தகைய உருவத்தை அவனுக்குக் கொடுத்ததென எவ்வாறு அவர் அக்குழந்தைக்குச் சொல்லுவார்? முதியவர் மௌனமாக நடந்துகொண்டிருந்தார்.

பிரதீபன் அழுகிறான், அழுதுகொண்டே இருக்கிறான். அவனது ஓலம் இன்றும்கேட்கிறது. அவனது வாழ்விற்கு இனிமேல் வளமில்லை, இன்பமில்லை. அவனை இனிமேலும் சமூகம் ஏற்காது. அவன் சமூகத்தில் ஒருவனாக வாழ சமூகம் இடம் கொடுக்காதா? ஆனால் அவனுக்கு தெரியாது பல சிசுக்களுக்கு வயிற்றினுள்ளேயே கல்லறைகள் கட்டப்பட்டுள்ளன என்று. பலர் பிறந்தும் பல குறைபாடுகளுடன் வாழ்கின்றனர். இதற்கு யார் பொறுப்பு? யார் குற்றவாளி?

பிரதீப்பைப்போல் எத்தனையோ பிரதீப்கள் இவ்வுலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். பெற்றோர் செய்யும் தவறுகளால் பிள்ளைகள் இவ்வுலகில்சமூகத்துடன் ஒன்றி வாழ முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பெற்றோரே தமது கடமைகள், பொறுப்புக்களை சமூகத்தில் உணர்ந்து செயற்பட்டு பிரதீப் [illegible]

## மீண்டும் இலையுதிர்காலமா?

★ யோ. யோண்சன் ராஜ்குமார்

தமிழ் மானுடம்
பூவாய் பிஞ்சாய்
கொட்டுண்ணும்
மாமிசக்கடை.
சதைக்கும்பலாய்
மனித சதைக்குவியல்கள்!
செந்நீர்ச் சேறும்
செந்தசையும்
சிதறிய வீதிகள்!
உறவுகளின்,
உருக்குலைவால்,
குலைந்து போன
உயிருடல்கள்!
அதிர்வலைகள் தணியுமுன்
மீண்டும்...
உயிருடலை
சுமந்து கொண்டு
கூடுவிட்டு......
இந்த விதியை
மாற்ற,
புயலாய் போன
பூக்களும்
அஞ்சலிப்பூக்களாய்...!
இறைவா!!!
இன்னும்
எத்தனை நாளுக்கு
இந்த
இலையுதிர்காலம்...!

## குறுக்கெழுத்துப் போட்டி தேடல் 3
## விடைகள் — பரிசு பெறுவோர்

### விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. உளமாற்றம் | 1. உலகத்தில் |
| 2. பெறுமதி | 3. பெண்ணுரிமை |
| 5. கலைகள் | 5. தலைப்பு |
| 8. சூரியனை | 6. கரு |
| 9. உவமை | 7. அயவலன் |
| 10. பாதுகாவலன் | |

### பரிசு பெறுவோர் விபரம்

1ஆம் இடம்
R. அலோஷியஸ்
113A வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

2ஆம் இடம்
யோ. அன்ரனி
இல. 9 புதுமைமாதா கோவில்
மேற்கு வீதி, யாழ்ப்பாணம்

3ஆம் இடம்
றோ. றெஜினோல்ட் நிகால்
வசந்தபுரம்.
கொழும்புத்துறை

போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும். உங்களுக்குரிய பரிசுத்தொகையைப் ''பாதுகாவலன்'' அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறுக்கெழுத்துப் போட்டி தேடல் 4ஐ அடுத்த [illegible] எதிர்பாருங்கள்.

# மசெனட் ஆண்டு

அன்புடையீர்

கடந்த இதழில் மடுத்திருப்பதியில் நடந்த கண்காட்சி கலை நிகழ்வுகள்பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதைத்தொடர்ந்து முருங்கனிலும், விடத்தல் தீவிலும், மன்னார் தீவிலுள்ள பேசாலையிலும், மன்னார் ஆசனக்கோவிலிலும் கண்காட்சியும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வுகளில் பங்குபற்றி பயன்பெற்றனர். அந்தந்த இடத்து மக்கள் பல வழிகளில் துணை நின்றனர்.

குறிப்பாக பங்குத்தந்தையர், உதவிப்பங்குத்தந்தையர், அருட்சகோதரிகள், பொதுநிலையினரை அவர்களது பெருமனதினையிட்டு நன்றியுடன் நினைவுகூருகின்றோம். இதோ இம்முறை மனம்திறந்தமடல் அங்கம் 6ஐ சுவைத்து மகிழுங்கள்.

அ. பி. லொசிங்ரன். அ. ம. தி

## "மனம்திறந்த மடல்"

### மடல் 6

என் இனிய நண்பா!

பரவாயில்லை. எனது கருத்தோடு உனது கருத்து ஓரளவு ஒத்து வந்துள்ளது. 'இத்தகைய பின்னணியில் வாழ்ந்த இயூஜின் ஒரு குருவாக வந்தது இறைவனின் செயல்' என்று வியந்துள்ளார்.

இதேபதிலை சற்று ஆழமாக எண்ணிப்பார். தேவ அழைத்தலின் மகிமை உனக்குப் புரியும். இறைவன் தன் பணிக்கு என ஒருவரை தெரிவு செய்துவிட்டால் அதற்கு தடையாக எதுவுமே இருக்கமுடியாது. மிக இழிநிலையில் வாழ்ந்தாலென்ன மிக உயர்நிலையில் இருந்தால் என்ன... இறை அழைத்தலின் முன்னால் தாழ்ந்தது உயரும்—உயர்ந்தது தாழும்

பிரபுவாகப் பிறந்து—அகதியாக அலைந்து—இல்லற வாழ்வைத் தேடி இதயத்தை·ஓடவிட்ட இயூஜினின் நாணயக்கயிறு இறைத்தொண்டால் இடப்பட்டது இழுக்கவேண்டிய நேரத்தில் இழுக்கவேண்டிய விதத்தில் இறைவன் அண்டி இழுத்துக் கொண்டார்... அவர் விரும்பி மணக்க இருந்த அழகியை என்புருக்கி நோய்மூலம் பிரித்ததும்—அளவுக்கு மிஞ்சிய சீதன ஆசையால் வலியவந்த பெண்ணைக் கோட்டை விட்டதும் கூட இயூஜினை உலகளாவிய இறைபணிக்கு அழைக்கும் திட்டம் இறைவனிடம் இருந்ததினாற்றான் என்பது புரிகின்றதல்லவா?

அகதியாக அலைந்த காலத்தில் வெனிஸ் நகரில், இயேசு சபைக் குரவரான டொன்பாரொலோவின் நட்பும், வழிகாட்டுதலும், அவரை கல்வியிலும்—இறைபக்தியிலும் ஈடுபடவைத்தன.

தாயன்பு கிட்டாத இயூஜினை பலேர்மோவில் குடியேறச் செய்த இறைவன் கேளிக்கை நிகழ்வொன்றில் கோமகள் கனிசாறோவேயை சந்திக்கச் செய்ததும்... பின்னர் அவளே தாயாக மாறி அன்பு—அறிவு—இறைபக்தி முதலியவற்றை ஊட்டி அவரைப் பாதைமாறாது பக்குவப்படுத்தியதும் இறை செயல் அன்றி வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

நிலத்தின் தன்மைக்கு ஒப்பவே வித்தின் விளைச்சலும் இருக்கும் என்பது உண்மை. அப்படியிருந்தும் பெற்றவளின் முன்மாதிரிகையற்ற வாழ்க்கை இயூஜினின் ஒழுக்கத்தை பாதிக்கவில்லை. தாயார் ஊட்டிய திருமண ஆசை அவரது பாதையை மாற்றிவிடவில்லை. ஆனால் பிரபுத்துவப் போக்கு அறவே அற்றவராக இருந்தார் என்றும் கூறுவதற்கில்லை.

23 வயதானபோது 54 பிராங்குகள் கொடுத்து பிரபல ஓவியரைக் கொண்டு தனது உருவத்தை வரைந்து வைத்திருக்கச் செய்ததும் கேளிக்கை விடுதிகளில் நாட்டம் இருந்ததும் அவரது பிரபுத்துவ மனப்போக்கின் வெளிப்பாடுதானே.

பிரபு, இளைஞன், அழகன் இந்தத் தகமைகள் இருந்தும் கூட இறைவன் அவரைக் கெட்டழிந்து போகாவண்ணம் ஆன்ம ரீதியில் தூய்மையானவராக வாழ பாதுகாத்து வந்தார் என்றால் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் என்ன? இறைவன் இந்த மனித சமுதாயத்துக்கு அவரைக் கருவியாகக் கொண்டு அரும்பெரும் சாதனைகளை நிகழ்த்தவிருந்தார் என்பதே. இறைவன் அவரை பிரான்சு நாட்டில் பல பிரபுக்களில் ஒருவராக வாழவிடாது உலகில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரில் உன்னதமான பிரபுவாக உயர்த்தி வைத்தார், அத்திட்டத்துடனேயே அந்தப் பொன்னை பல இன்னல்களில் உழல விட்டு உருக்கிப் புடம்போட்டு. அடித்துச் செலுத்தி திருச்சபை அன்னைக்கு விலை உயர்ந்த அணியாக அணிவித்துள்ளார். இவையெல்லாம் மொத்தத்திலே எமக்கு உணர்த்தி நிற்கும் உண்மை என்ன? உண்மையான தேவ அழைத்தல் ஒருவருக்கு இருக்குமாயின் எந்தச் சோதனையும்—எந்தச் சக்தியும் அவரைத் திசைமாற்றி விடமுடியாது என்பதையே. ஆனால் இயூஜின் துறவறவாழ்விலும் பல சோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவை பற்றி அடுத்த மடலில் தொடர்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு
உன் இனிய நண்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியின் நிமித்தம் துன்புறுத்தப் படுவோர் பேறு பெற்றோர்



தொகுப்பு
★ செல்வி M. M. அல்பிரட்

## கொலைஞர்கள்

★ செல்வி M. M. அல்பிரட் (ஆசிரியை)

வாசகர்களே! தலைப்பைப் பார்த்தவுடன் யார் கொலைஞர்கள் என்று நீங்கள் ஒவ்வொருவரும் எண்ணுவது நமக்கு நன்றாகப் புரிகின்றது. உங்கள் சந்தேகம் போக்கும் பதில் இதோ...

நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்,

ஏனெனில் விண்ணரசு அவர்களதே.

முன்னொரு காலத்தில் நீதிக்காகத் துன்புற்றவர்கள், கொலையுண்டவர்கள் அநேகர். காரணம் நீதி நிலைபெறவேண்டும் அது ஏனையவர்களால் அழியக்கூடாது, ஆக்கிரமிக்கப்படக்கூடாது. காப்பாற்றப்பட்டுப் பேணப்படவேண்டும் என்பதற்காக. ஆனால் இன்று நீதியைக் கொல்பவர்கள் நாம் ஒவ்வொருவரும் தான். நாம் உதட்டளவில் நீதி எங்கே உள்ளது. அது செத்துவிட்டது. ஏதோ நடக்கிறதைப் பார்த்துக்கொண்டிருப்போம் என்றெல்லாம் கருத்தற்ற விதமாகப் பிதற்றுகிறோம். உண்மைநிலை என்ன? நீதி அழியவில்லை எம்மால் அழிக்கப்படுகிறது. நாம் நீதியைக் கொல்கிறோம். இங்கு நாம் காண்பது முரண்பட்ட நிலை. அன்று நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்பட்டார்கள். இன்று நம்மால் நீதி சாகடிக்கப்படுகிறது. யார் யார் நீதியின் சாவுக்குக் காரணமாயுள்ளனரோ அவர்கள் அனைவரும் கொலைஞர்களே!

## நீதிக்கு குரல் கொடுப்போம்

★ ப. விமல்றாஜ்

அகதி முகாம்கள் அழுகுரல்களால் நிறைந்துவிட்டன. அகதிவாழ்வு அநியாயமாக திணிக்கப்பட்ட தொன்றாகிவிட்டது. விழுந்த எறிகணையின் புகைமூட்டம் அடங்குவதற்குள் விண்ணை முட்டுகின்ற மரண ஓலங்கள் அங்கவீனர்களினதும் அநாதைகளினதும் பட்டியல் அதிகரிக்கும் காலமிது. பொருளாதார நசிவுகளால் வரிசைவாழ்வும் வரட்சியான சிறுவட்டத்துள் முடங்கும் அலங்கோலம். எதிர்கால நோக்கங்கள் சிதறியதால் ஏற்பட்ட தாக்கங்கள். இவையனைத்தும் எங்கோ நடந்தவையல்ல. இங்கு எங்கும் நடக்கின்ற நிகழ்வுகள். இவற்றுக்கு முடிவே இல்லையா? என்ற அங்கலாய்ப்புகளும் செவிப்பறையில் அதிர்ந்தவண்ணம் இருக்கின்றன. ஆம். இவையனைத்தும் அநீதியின் மறுபிறப்புக்கள். சுவடுகள்.

இந்நிலையில் நாம் நீதியின் நிமித்தம் துன்புறுவோர் யார் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். மேற்கூறப்படுவோர் மாத்திரம் துன்புறுவோர் அல்ல. ஒழுங்கீனங்களை களைய முயன்றவேளை பலர் முன்பெறும் அவமான வார்த்தை... முதியவரின் இயலாத் தன்மைகளில் இகழும் இளவட்டங்களை எச்சரித்தவேளை வாங்கிய வச்சிர வார்த்தைகள்... குடும்பங்களுள் பிளவுகளின் போது நீதி சொல்ல முயன்றவேலை சூட்டப்பட்ட "உலகம் தெரியாதவன்" என்ற பட்டங்கள்... பாடசாலை, அலுவலகங்கள் இன்னும் ஏனைய அமைப்புக்களில் அநீதிக்கு சிம்மக்குரல் எழுப்பிய போது "வெளிவேடக்காரன்" என வர்ணித்து ஒதுக்கப்பட்ட கசப்பான அநுபவங்கள்... இவையனைத்தும் நீதிக்கு குரல் எழுப்ப தன் விளைவாக வெகுமதியாகக் கொடுக்கப்பட்ட பரிசுகள். ஆகவே நல்லவனாக வாழமுற்படுதல் தவறா? நல்லவைகளை சொல்ல முற்படுதல் தவறா? என்ற வினாக்களுக்கு விடையினை விவிலியம் என்றகருவூலத்தில்தேடுவோம்.

பழைய ஏற்பாட்டில் அரசர் ஆகமத்தில் நீதிக்குக் குரல் கொடுத்த இறை அநுபவமுள்ள தீர்க்கதரிசி எலியாசு பசியாலும், பயத்தாலும் 'ஆண்டவரே நான் வாழ்ந்தது, போதும் என் உயிரை எடுத்துக் கொள்ளும்" (1 அர. 19. 4-5) என அபயக்குரல் எழுப்ப ஆண்டவர் அவருக்கு உணவும், தண்ணீரும் கொடுத்து நாற்பது நாள் நடக்கச்செய்து அரிய சாதனைகளை நிறைவேற்றினார். பாவத்தின் சுமையால் இயேசு கெத்சமெனித் தோட்டத்தில் "என் தந்தையே கூடுமானால் இத்துன்பம் என்னை விட்டு அகலக்கடவது" (மத். 26: 39-40) என மனம் நொந்து வருந்த கடவுள் தூதரை அனுப்பித் தேற்றி இரட்சணிய பாதைக்குச்செல்ல வேண்டிய மனத் தைரியத்தையும் வீரியத்தையும் அளித்தார்.

இவர்கள் இருவரும் நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்பட்டோர். நீதிக்காக அனைத்தையும் அர்ப்பணித்தவர்கள். ஆனால் மனிதராய் இருந்தனர். அதேபோல்தான் நாம் அனைவரும் மனிதர்கள். மனிதர்களாகிய நாம் நீதியின் நிமித்தம் துன்புறும்போது ஆண்டவர் தம் அருட்கரத்தால் அணைப்பார் என்பதை ஆழமாக நம்ப வேண்டும். சிலவேளை அதைரியத்தினால் அபயக்குரல் எழுப்பினாலும் ஆண்டவரில் நாம பேறுபெற்றவர்களாய் மறு உலகின் சம்பாவனையை எதிர்பார்ப்போம்.

திருமுழுக்கினால் கிறிஸ்தவனாக்கப்பட்ட நாம் அனைவரும் கிறிஸ்துவின் சீடர்கள். ஆகவே சீடனுக்குரிய தாற்பரியத்தை விளங்கிக்கொண்டு தத்ரூபமான சீடத்துவத்தை வாழ முற்படவேண்டும். "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து தன் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின் தொடரட்டும்"(மத் 9/23) எனகிறார் கிறிஸ்து. உண்மையான கிறிஸதவ வாழ்வின் தத்துவமும் அதுவே. தங்களுடைய சுமைகளை அன்றாடஆடர்களைத் தாங்கியவாறு முன்னே செல்கின்ற கிறிஸ்துவன் வழியில் விழிபதிப்பதே உயிரோட்டமான கிறிஸ்தவ வாழ்க்கை. புனித சின்னப்பர் கூறுவதுபோல் "பக்தியோடு இயேசுவில் வாழவிரும்புவோர் அனைவரும் துன்புறுத்தப்படுவர்" (மத். 3: 12) ஆம். நாம் இறைவனிடம் நெருக்கமாகச் செல்கின்றபோது அதனைக் குலைப்பதற்கு சாத்தான் அன்றாட, சமகாலப் பிரச்சனைகளை முன்னெடுப்பான் என்பது வரலாற்று உண்மை. எனவே அழுவீர்கள். புலம்புவீர்கள். உங்கள் துன்பம் இன்பமாக மாறும் என்ற அந்த சத்தியத்தில் சித்தமதைப் பதித்து வாழ்வோம். இயேசுவின் பாடுகளுக்குப் பின்னால் தான் இரட்சணியம் கிடைத்தது. இரவுக்குப்பின்னால்தான் பகல் உண்டு. புயலுக்குப்பின்னால் தான் மயான அமைதி கிடைக்கும் என்பதை ஐயமுற விளங்கி இயேசுவில் சங்கமமாகும்போது வாள்கள், வேதனைகள் சவால்கள் அதிகரிக்கும் என்பதை உணர்ந்து அந்த துன்பங்கள் இன்பமாக மாறும் என்ற உறுதியான நம்பிக்கையோடு, இன்னுமொரு உலகில் பேறுபெற்றவர்களாய் மாற நீதிக்குக் குரல் கொடுப்போம்.

## நீதியே விடுதலை

● திருமதி P. J. அன்ரனி (ஆசிரியை)

இன்றைய உலகில் எத்திசையை நோக்கினும் சமாதானம் என்றவார்த்தை அடிபடுவதைக் காண்கின்றோம், ஒவ்வொரு உள்ளங்களும் நீதியுடன் கூடிய சமாதானம் கிடைக்காதா என ஏங்குகின்றன. சமாதானத்திற்காகப் பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம், பாதயாத்திரை இவ்வாறு பல முயற்சிகள். எத்தனை முயற்சிகள் மேற்கொண்டாலும் வாழ்வில் நீதி, நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற நல் விழுமியங்கள் பேணப்படவில்லையாயின் விடுதலை காணவோ, நிறைவு காணவோ முடியாது. நீதியை வேண்டி நிற்கும் குடும்பங்கள் எத்தனை? பாகப்பிரிவினைக்காகப் போர்புரியும் நாடுகள் எத்தனை? இரத்த உறவுகள் இடையே நீதியின்மை, கணவன் மனைவியிடையே நீதியின்மை, ஆட்சிபுரிவோர், அதிகாரம் தாங்குவோரிடையே நீதியின்மை, முதலாளி தொழிலாளி இடையே நீதியின்மை, இவ்வாறு திரும்பும் திசையெல்லாம் அநீதியும், அக்கிரமமும் தலைவிரித்தாடுகின்றன.

குற்றம் புரிந்தவன் தலைநிமிர்ந்து நடக்கும்போது, அப்பாவி சிறைக்கம்பி எண்ணுகின்றான். கடமை செய்பவன் கைகட்டி நிற்க, அதிகாரம் செய்பவன் ஆணவம் பேசுகின்றான். உடன் வாழ்வோர் உயர்வடைய, உள்ளம் கொதிக்கின்றான். ஆட்சிபுரிவோரால் அப்பாவி அடிமையாக்கப்படுகின்றான். பணக்காரன் ஏழையைச் சுரண்டி வாழ்கின்றான். அடக்கு முறைகளாலும், ஆணவப் போக்கினாலும் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. நீதி நசுக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்க வந்த இறைமகன் கிறிஸ்துவுக்கு கிடைத்த பரிசு சிலுவை மரணம். அதேபோல் நீதிகோருவோனுக்குக் கிடைக்கும் பரிசு நியாயமற்ற தண்டனை.

நீதியின் நிமித்தம் துன்புறுவோர் நிறைவு பெறவேண்டுமானால் ஊழல்கள், வஞ்சனைகள், அடக்கு முறைகள் வன்செயல்கள் அனைத்தும் பூண்டோடு அழிக்கப்பட வேண்டும். நீதிக்காகக் குரல் கொடுப்போர் துணிவுடன் முன்வரவேண்டும்.

## துன்பத்தைக் கண்டு துவளாதே!

★ அருள்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன், டிலாசால் இல்லம், 114, யாழ்.பிரதான வீதி,

உலகிலே பிறந்த ஒவ்வொரு மனிதனும் வாழ வேண்டியவன். அதற்கான வழிவகைகளை எல்லாம் இறைவன் செய்து கொடுத்து அவனது உள்ளத்திலே வாழுகின்றார். இறைவனைத் தனது உள்ளக்குடிலில் வைத்திருக்கும் மனிதன் எப்படியும் வாழலாம் என்ற கொள்கையை விட்டு இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒரு வரையறைக்குள் தனது வாழ்வை நடத்த முற்படுகின்றான். இதனால் நல்ல கோட்பாடுகளைப் பின்பற்றி கிறிஸ்தவ விழுமியங்களின்படி வாழுகின்றான். இவ்வாறு வாழும் போதே அன்பு, நீதி, [illegible] சமாதானம், அவன் [illegible] இருந்து மேற்கிளம்புகின்றது.

நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவது என்றால் கிறிஸ்தவன் மேற்கூறப்பட்ட கிறிஸ்தவவாழ்வை வாழும் போது வாழ்வில் வேதனைகளையும், எதிர்ப்புக்களையும், போராட்டங்களையும், இழப்புக்களையும் எதிர்கொள்வான் என்பதைக் குறிக்கின்றது. இது தான் ஆரம்பத் திருச்சபையின் அனுபவமாகவும் இருக்கின்றது. இறைவாக்கினர்களும், ஆதிக்கிறிஸ்தவர்களும் தங்கள் நீதிநிறை வாழ்வின் காரணமாகத் துன்பங்களைச் சந்தித்தனர். ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கும், அநீ[illegible] களையும், அவலங்களையும் தாங்கினர். இதற்காக உயிரையே உவந்தளித்தனர்.

இன்றைய போராட்ட சூழலிலும் மேற் கூறப்பட்ட அனுபவத்தை இம்மண்ணில் எல்லோரும் அனுபவிக்கின்றார்கள், அனுபவித்திருக்கின்றார்கள். இவை யாவும் இன்றைய ஆட்சியாளர்களின் அடக்குமுறையினாலும், அநீதியினாலுமே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நீதியின் நிமித்தம் துன்பப்பட்டு, இறைமகன் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு கொண்டு அவரோடு மரிக்கின்றவர்களுடையதே இறையரசு என்று கிறிஸ்து இப்பேற்றில் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| 9 | எம் விழிகளின் ஒளி யேசு |
| 21 | எம் வாழ்வின் வழி யேசு |

குட்டிக்கதை

## "யாருக்குச் சோதனைகள்"

கிங்ஸ்லி மாக்கஸ் என்பவன் இறைபற்று நிறைந்த மாணவன். நல்ல கெட்டிக்காரன். வகுப்பில் எப்பொழுதும் அவனுக்குத்தான் முதல் இடம். எவருக்கும் உதவிசெய்வது, தாழ்மைத் தன்மை, அவனுக்கே உரித்தான புன்முறுவல் இவை அவனின் பண்புகள்.

நாடளாவிய ரீதியிலான பொதுத் தேர்வு ஒன்றிற்கு தோற்றுவதற்காக மாக்கஸ் அயராது படித்துக் கொண்டு வந்தான். தன்னால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு படித்தான்.

பின்பு இறை நம்பிக்கையுடன் பரீட்சைக்குத் தோற்றினான்! அடுத்தமாதமே பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாயின. மாக்கஸ் எதிர்பார்த்ததை விட மிக மிக குறைவான பெறுபேறுதான் அவனுக்குக் கிடைத்தது.

அவனால் கவலையைத் தாங்க முடியவில்லை. விரக்தியுற்றவன் போல இருந்தான். "இறைவன் ஏன் என்னைக் கைவிட்டார். நான் என்ன தவறு செய்தேன்" என்று யோசிக்கலானான். ஆயினும் விசுவாசத்தில் தளரவில்லை!

அவனுக்குத் தொடர்ந்தும் துன்பங்கள் வந்தன. அவன் என்ன செய்வதென்று தெரியாது திகைத்தான். "நான் இறைவனுக்கு ஏற்புடையவனாக வாழ முனைந்தும் இத்துன்பங்களை இறைவன் ஏன் எனக்குத் தருகிறார்," என்று சிந்தித்த அவன் ஒருநாள் தன் பங்குத்தந்தையிடம் சென்று தன் கவலைகளைக் கூறினான்.

அவரும் அவனுக்கு ஆறுதல் கூறினார். பின்பு ஓர் மாணவனைக்காட்டி "மாக்கஸ் இம்மாணவனது இலட்சியம் என்ன" என்று கேட்க அவன்,

"நன்றாகப் படித்து உயர்வது" என்றான். உடனே குரு "அதற்கு என்ன தேவை?" என அவன்,

"பரீட்சையில் சித்தி தேவை" என்றான். பின்பு குருவானவர் ஒரு தொழிலாளியைக் காட்டி,

"இவருக்கும் பரீட்சைகள் வருமா மாக்கஸ்?" என அவன்,

"இல்லை ஃபாதர் இவர் படித்தால்தான் பரீட்சை வரும்" என்றான். உடனே குரு "மாக்கஸ் எவ்வாறு படிப்பவனுக்குத்தான் பரீட்சைகள் வருகின்றனவோ அவ்வாறே இறைவனின் சித்தப்படி நடக்க முனைபவனுக்குத்தான் பரீட்சைகள் வரும். இப்பொழுது உனது பிரச்சனை விளங்குதல்லவா" என்றார், மாக்கஸ்சிடம் "ஃபாதர் உணர்ந்துகொண்டேன்.

மிக்க நன்றி ஃபாதர்" என்றான்.

கண்மணிகளே!

எமக்கு இக்கதை தரும் படிப்பினைகள் எவை?

1. இறைவன் தந்த ஆற்றல்களை முழுமையாக வெளிப்படுத்தி வளர்க்க நாம் முனைய வேண்டும்.
2. கடின முயற்சியையும் ஆழமான இறைநம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டும்.
3. எமக்கு வரும் சோதனைகளை இறைவன் எமக்கு வைக்கும் பரீட்சைகளாகக் கருதி எமது ஆன்மீகபலத்தால் அவற்றை வெல்லவேண்டும்.
4. இளவயதிலே தீர்மானங்களை நிறைவேற்றுமுன் அனுபவமுள்ளவர்களிடம் ஆலோசனை பெறவேண்டும்.

இனிமேல் நீங்களும் கடைப்பிடிப்பீர்களல்லவா?

ஆக்கம் : ம. பி. நிரோஷன்

அன்பின் கண்மணிகாள்!

இயேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக. கண்மணி நிரோஷன் தந்த கதையைப் படித்தால் மட்டும்போதுமா? படிப்பினைகளையும் படித்துப் பயன்பெற வேண்டுமல்லவா!

### சிறுகச் சேருங்கள்

விடைகள் : 7) செபம் 8) சிலுவை
9) அன்பு 10) அவிலா

காவலன் களஞ்சியம் : பார்வை 2இன் முடிவுகள் அடுத்த சுடரில் வரும். நன்றி நிரோஷன்.

அன்பின், அன்பு விழி,

## வன்னிப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறை ஆசிரியர் திரு. ச. ஆரோக்கியநாதர் ஒன்றிணைந்து இக்கருத்தரங்குகளை நெறிப்படுத்தினர்.

13ஆம், 14ஆம் திகதிகளில் வலைப்பாட்டுப் பங்கிலும், 17ஆம், 18ஆம் திகதிகளில் கிளிநொச்சி, பரந்தன், வட்டக்கச்சி, உருத்திரபுரம், அமதிபுரம் ஆகிய ஐந்து பங்குகளுக்குமாக கிளி/மேய்ப்புப்பணி நிலையத்திலும், 19ஆம் திகதி புதுக்குடியிருப்பிலும், 20ஆம் திகதி முல்லைத் தீவு பங்கினருக்கு முள்ளியவளையிலும், 21ஆம் திகதி மாங்குளம், வவுனிக்குளத்திலும் திருவழிபாட்டுக் கருத்தரங்கு, கருத்துரைகள், குழு ஆய்வு, கருத்துமோதல் போன்ற நிகழ்ச்சிகள் ஊடாக இடம் பெற்றது. 15ஆம், 16ஆம் திகதிகளில், கிளிநொச்சிக் கோட்ட எல்லாப் பங்குகளிலுமிருந்து வந்த 51 மறை ஆசிரியர்கள் இரு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

விண்ணக வாழ்வில்

### ஏழு ஆண்டுகள்



P. J. அமிர்தநாயகம்
(இளைப்பாறிய ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி)

தோற்றம் 22-02-1912 மறைவு 05-11-1988

ஏழைகளின் உற்ற நண்பனாக, இறை அன்பை, எந்நேரமும் எல்லோர்க்கும் எடுத்துரைப்பதே தன் பணியென வாழ்ந்து, பிரிந்த எம் சகோதரரின் ஆன்ம சாந்திக்காக நன்றியுணர்வுடன் இறைவனை வேண்டுவோம்.

அன்னாரது ஆன்ம சாந்திக்காக திருப்பலிகள் 5ஆம் திகதி அருள் ஆச்சிரமத்தில் காலை 6 மணிக்கும், புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் 6 ஆம் திகதி காலை 6மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படுப்.

மனைவி, மக்கள், உறவினர்.

A/46/95

### 10-ம் ஆண்டு நினைவு

திருமதி கிளாறம்மா
30-10-1985

வாழும்வரை வாழ வைத்து
வளர்த்தெடுத்து எமை அன்பில்
ஆளுபவராய் இருந்தீர்;
எங்கள் எண்ணமதில் மட்டுமன்று
என்றென்றும் நித்தியமாய்
விண்ணிறைவன் பொன்னடியில்
வாழுக.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 30-10-95 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

A/44/95 உறவினர்கள்

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

## இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-27

### உலகிலேயே பெரிய மறை மாவட்டம் சிக்காகோவில் திருத்தந்தை

"வாழ உரிமை, மனித சுதந்திரம், கல்வி கலாசாரம், மனச்சாட்சிப்படி செயல்படும் உரிமை, மத வழிபாட்டு உரிமை, சொத்துரிமை, உழைக்க உழைப்பிற்கேற்ப ஊதியம் பெற உரிமை, அமைப்புக்கள் ஏற்படுத்த, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குடியேற உரிமை, அரசியலில் பங்கு பெறும் உரிமை..." அனைத்துமே மனிதனின் அடிப்படை உரிமை. இதை அடைய அனைவரும் உழைக்க வேண்டும் என்றார்.

உலகிலேயே பெரிய மறை மாவட்டமும், வார்சாவிற்கு அடுத்த படியாக அதிகமான போலாந்து மக்கள் வாழும் நகரமுமான சிக்காகோ நகருக்குச் சென்றார். கிறிஸ்வின் மதிப்பீடுகளை ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார்.

75,000 மக்கள் மத்தியில் யான்கி விளையாட்டு மைதானத்தில் பேசுகையில் ஏழைகளையும் உங்கள் சகோதர சகோதரிகளாகக் கருதுங்கள். விருந்துண்ணும் போது கீழே விழும் ரொட்டித் துண்டுகள் அவர்களுக்குப் போதும் தானே என்று எண்ணுவது மனிதப் பண்பல்ல. எனது தேவைக்கு அதிகமானதை, என்னிடம் மிஞ்சுவதை ஏழைகளுக்குக் கொடுப்போம் என்பது பெருந்தன்மையன்று. ஆடம்பர உணவுண்ணும் பொழுது ஒன்றும் இல்லாதார் இருக்கிறார்கள் என்பதை மறக்க வேண்டாம். உங்கள் விருந்துகளில் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கட்டும். உறவினர், நண்பர்களுக்காக அல்ல ஒன்றும் இல்லாத வறியவர்களுக்காக. இன்று செல்வம் மிக்க நாட்டிலும் வறியவர்கள் உள்ளனர். செல்வத்தோடு இருப்பவர் செல்வம் இல்லாதோரையும் கவனிக்க வேண்டும் என்று வலிந்துரைத்தார்.

திருமணம் — ஆண் பெண் உறவு — சுதந்திர மனப்பான்மை என்பவற்றில் வாழ்வு சீரழிவதை வேதனையுடன் நோக்கினார். சமூக நியதிகள் —வாழ்க்கை மரபுகள் ஆகியவற்றை தாண்டிச் சென்று சுதந்திரம் என்ற போர்வையில் இச்சைவழி நடப்பது நாட்டை அழித்து விடும் என்று எச்சரித்தார்.

இளைஞர்கள் அணியும் "ஜீன்ஸ் துணி" கால் சட்டையையும், பாப்பரசர் பெயர் பொறித்த மேற் சட்டையையும் அவர் அணிந்து கொள்ளும்படி இளைஞர் கூட்டத்தில் அவருக்கு அளித்தனர். அன்போடு அதனை ஏற்றுக் கொண்டு அவர்களோடு கை கோர்த்து ஆடினார்.

"...முதிர்ச்சி அடைந்த மனிதனாக மாறுவது எப்படி என்று அறியாத நிலையில் கிறிஸ்துவை உற்றுப்பார். மனிதத் தன்மையின் முழுமை அவரிடமே உள்ளது. அமெரிக்க மக்களிடையே, உலக மக்களிடையே உள்ள பங்கு என்ன என்பதை அறிய மீண்டும் அவரிடமே செல். கிறிஸ்துவில் நீ முழு அமெரிக்கனாகவும், உலக சமுதாயத்தின் ஒப்பற்ற குடிமகனாகவும் வாழ முடியும்..." என்று இளைஞர்களுக்கு அறிவுறுத்தினார். மணத்துறவு, பெண்கள் குருத்துவம் என்பன பற்றியும் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டார். கூட்டத்தில் இருந்த 50 கத்தோலிக்க கன்னியர் எழுந்து நின்று பாப்பரசருக்கு எதிர்ப்புத் தெரிவித்த சம்பவம் இங்குதான் இடம்பெற்றது.

(வளரும்)

### 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மத்தியாஸ் இராயப்பு

பிறப்பு 23-05-1901 இறப்பு 27-10-1985

சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை
மறவாதீர்.

இவரின் பிரிவால் துயருறும்
மகன், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

A/48/90

விண்ணுலகெய்திய

### 20 ஆம் ஆண்டு நிறைவின் நினைவு



அமரன் யோவான் எலியாஸ்

பிறப்பு 02-12-1908 இறப்பு 22-10-1975

கர்த்தாவே! உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை. ஆதலால் உமது அடியானின் குற்றங்களை மன்னித்து பேரின்ப வாழ்வை இவருக்கு அளித்தருளும்.

இவரை இழந்து துன்புறும்
மனைவி, மக்கள், சகோதரர்,
உறவினர்.

A/45/95

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### யாழ் மறைமாவட்ட குருக்களுக்கான
## ஞான ஒடுக்கம்
### ஆயர் இல்லத்தில்

1. நவம்பர் 7 மாலை — 13 காலை வரை
2. நவம்பர் 14 மாலை — 20 காலை வரை

நெறிப்படுத்துபவர் :

அருள்தந்தை அன்செல்ம் டீ குருஸ்

# சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் உருவாகவேண்டும்

கண்டியில் ஒக். 2-12இல் இடம்பெற்ற ''முழுமையான ஆசிய மேய்ப்புப்பணி அணுகுமுறை'' எனும் 'ஆசிபா' (ASIPA) பட்டறையின் இறுதியில் விடுத்த அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:

1990 இல் பாண்டுங் (Bandung) நகரில் கூடிய ஆசிய ஆயர்கள் தங்களின் 5வது முழுமையான கூட்ட அமர்வில் தெரிவித்த ''புதிய வழியில் திருச்சபையாகும்'' நோக்கை யதார்த்தநிலையில் அடைந்து கொள்ள இலங்கைத் திருச்சபையையும், ஏன் ஆசிய திருச்சபையையும் கூட, வரலாற்றின் இறைவன் தூண்டுகின்றார். அவர்கள் கூறுவதாவது: ''திருச்சபை பல்வேறு சமூகங்களின் ஒன்றிப்பாகவிருந்து, உயிர்த்த ஆண்டவரின் ஒருவித அருள் சாதன பிரசன்னமாகிய இறைவார்த்தையின் அழைப்பினால் நம்மை சிறிய கிறிஸ்தவ குழுமங்களாக மாற்ற வழிசமைக்க வேண்டும்.

பொது நிலையினர், துறவிகள், குருக்கள் என்ற வேறுபாடின்றி எம்மிடையேயுள்ள ஆற்றல்களைப் பகிர்ந்து கொண்டு, காலத்தின் நிகழ்வுகளோடு பங்குகொள்ளும் போதுதான் இவ்வெண்ணம் சாத்தியமாகும்; திருச்சபையும் இறையரசைக் கட்டியெழுப்பும்.''

''ஆசிபா'' (ASIPA) பட்டறையின் ஊடாக, தேசிய திருச்சபையில் கூட்டுப் பொறுப்பு, மாவட்டத் திருச்சபைகளில் உயிர்ப்பான கட்டமைப்புகள், ஆசிபாவின் குறிக்கோளை நடைமுறைப் படுத்தும் வழிகாட்டிகள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் இடையே ஒரு தொடர் உருவாக்கம், அருள் பொங்கும் கிறிஸ்தவ குழுமங்கள், உருவாக வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கு விறுவிறுப்பான, கூட்டுறவால் உருவாகும் ஒரு சஞ்சிகை ஒருவருக்கொருவர் செய்தி சொல்லி ஊக்குவிக்கத் தேவையானது.

கடந்த ஏப்பிரல் மாதம் கொழும்பில் நடந்த தேசிய மேய்ப்புப்பணி மாநாட்டின் ஏடுகள் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரால் இப்பட்டறை அமர்வுகளின்போது வைபவரீதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஆயிரம் மௌன...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நின்றுவிட ஏதுவாகின்றது. இதன் பின்னர் ஆட்சிபுரிந்த ஆரியமன்னர்களின் காலத்திலேயே அதாவது 16ஆம் நூற்றாண்டளவில் கிறிஸ்தவம் யாழ்ப்பாண மண்ணில் காலூன்றுவதையும், தளிர்விட்டு மேலோங்குவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனினும் இங்கு ஏற்பட்ட மௌன இடைவெளிக்கால கட்ட நூற்றாண்டுகளில் இந்தியாவின் கேரளத்தில் திருச்சபை வளர்ந்ததையும், கி. பி. 635இல் அலோப்பென் என்னும் கிறிஸ்தவ துறவி சக்கரவர்த்தி ரெயிட்சுங்கினால் சீனாவில் கௌரவத்துடன் வரவேற்கப்பட்டு அங்கு திருச்சபையை உருவாக்க அனுமதிக்கப்பட்டதையும், கவனத்தில் கொள்ளல் வேண்டும். இக்கால வேளையில் சீனதேசம் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றில் மேலோங்கி நின்றமையும் வரலாற்று உண்மைகளாகும்.

கி. பி. 1309இல் பிரான்சிக்கன் மிசனரிசபையைச் சேர்ந்த யோண்மென்டிகோர் வினோ என்ற துறவி பல இடங்களில் திருச்சபையை நிறுவி வளர்த்ததையும் அங்கு அவர் ஆயராக நியமிக்கப்பட்டமையும் சான்றுகளாகும். யாழ்ப்பாணத்தில் மௌனம் நிலவிய நூற்றாண்டுகளில் முக்கிய சனத்தொகையைக் கொண்டிருக்கும், சீன நாட்டில் அதன் மக்களிடையே கிறிஸ்தவம் வலுவுடமை அறியப்படவும் வேரூன்றவும் தொடங்கி 16ஆம் நூற்றாண்டு போத்துக்கேயர் வருகையுடன் சுடர்விட்டுப் பிரகாசிக்கவும் ஆரம்பித்தது.

### இளைஞர் ஆணைக்குழு

**அறிமுகப்படுத்துகின்றோம்: 5**

## புனித சூசையப்பர் இளைஞர் ஒன்றியம்

இடம்:- புதுக்குடியிருப்பு ஆலயத் திருச்சபை

பாதுகாவலர்:- புனித சூசையப்பர்

விழா.- பங்குனி 19

அங்கத்தவர்:- 35

கூட்டங்கள்.- ஒரு மாதத்தில் இரு தடவைகள்

தலைவர்:- செல்வன் அன்ரனி பிலிப்

நோக்கம்: சமுகத்தின் முதுகெலும்பாக இருந்து அதனை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லுதல்.

கிராமத்தின் கல்வியறிவை வளர்க்க உழைத்தல்.

இளைஞர்களிடையே ஒன்றிப்பையும், நல்லுறவையும் வளர்த்தல்.

ஒன்றிய ஆரம்பம்:- 1988

செயற்பாடுகள்;

* கிராமத்து மக்களிடையிலும், மாணவர்களிடையிலும் கல்வியறிவை வளர்க்க ''அறிவகம்'' ஒன்று நடத்தப் படுகிறது.
* கிராமத்தின் வளர்ச்சிக்கான பல செயற்பாடுகள் இவர்களின் மூலமாக சிரமதானம் மூலம் நிறைவேற்றப் படுகின்றன. வீதிகள் செப்பனிடுதல், குடிசைகள் அமைத்துக் கொடுத்தல் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம்.
* ஆலய நிகழ்வுகளில் பங்குத் தந்தையுடன் இணைந்து செயலாற்றுகிறார்கள். இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் இவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியது.
* கிராமத்து இளைஞர்களிடையே ஒன்றிப்பை வளர்க்க விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப் படுகின்றன.

புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் இளைஞர் ஒன்றிய அங்கத்தினர்களே!

உங்களது வளர்ச்சியையும், சேவைகளையும், ஒன்றிப்பையும், ஊக்கத்தையும் கண்டு உங்களை மெச்சுகிறோம். தொடர்ந்து வளர வாழ்த்துக்கள். கத்தோலிக்க இளைஞர் என்ற ரீதியில் இறைவார்த்தையை வாசித்து தியானிப்பதிலும், ஆன்மீக விடயங்களிலும் கூடிய அக்கறை காட்டவேண்டி ஆசிக்கிறோம். ஆணைக்குழு உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட தயாராய் உள்ளது.

மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு

## மகாஞான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து பாடல், வேண்டுதல்கள், நன்றிகள் என்பன இதில் இடம் பெற்றன.

ஒவ்வொரு தினமும் பத்து வலயங்களிலும் விவிலியம் பவனியாக ஒரு இல்லத்திலிருந்து அடுத்த இல்லத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு அப்பகுதி குடும்பங்கள் ஒன்றுகூடி இல்ல வழிபாட்டை நடத்தினர். பங்கில் வாழும் ஏனைய மதத்தினரும் இவ்வழிபாட்டை தமது இல்லங்களிலும் விரும்பி நடத்தியது குறிப்பிடத்தக்கது.

30-08-95 அன்று தொடங்கிய நவநாட்களில் தினமும் காலையில் தியான வழிபாடும், மாலையில் நற்கருணைப்பலியும் இடம் பெற்றன. மறைபோதகர்கள் அருள்திரு லெம்பேட் o.m.i. அருள்திரு செலஸ்ரீன் o.m.i. அடிகளாரின் போதனையும் அணுகுமுறையும் மிகவும் மெச்சத்தக்கன.

மேலும் இவர்களது வீடு தரிசிப்பு மக்களுடன் உரையாடலும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் காணாமற் போன ஆட்டைத் தேடி மீண்டும் மந்தையிற் சேர்த்தவாறாக அமைந்திருந்தன.

7-9-95 ஆலய விழாவின் முன்னைய நாள் பூராவும் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு வலயம் வலயமாக வழிபாடுகள் இடம் பெற்றன. மாலையில் நற்கருணை நாதருக்கு அலங்

8-9-95 இறுதி நாள் மக்கள் கார ஊர்திப்பவனி வழமைக்கு மாறாக பங்கின் வீதி வழியே இடம்பெற்றது. கூட்டம் திரண்டுவந்து நற்கருணைப்பலியில் பங்குகொண்டு ஆலய மைதானத்தில் நிகழ்ந்த அன்னையின் திருப்பவனியையும் கண்டு களிகூர்ந்து அவளின் ஆசியையும் பெற்றனர். அன்று மாலை நன்றி விழா எடுக்கப்பட்டது.

## புதிய குரு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற விருதுவாக்கை இலட்சியமாகக் கொண்ட அமலமரித் தியாகிகளின் சபையின் ஸ்தாபகர் யூஜின் டி மசனெட்டுக்கு புனிதர் பட்டம் கொடுக்க இருக்கும் இவ்வேளையில் அமலமரி அன்னையின் புதிய குரு றொபேட்; தியாகிகளின் சபைக்கு கிடைத்த மற்றுமொரு ஆசீர்வாதமாகும். அவர் தம் வாழ்வும் பணியும் சிறக்க நிறைவோடு வாழ்த்துகின்றோம்.

## சொந்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருள்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகள் மறையுரை நிகழ்த்தினார்.

திருப்பலியைத் தொடர்ந்து பங்குத்தந்தை அருள்திரு A.J. யாவிஸ் அடிகள் தலைமையில் ஓர் கௌரவிப்பு வைபவம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பருத்தித்துறை மறைக் கோட்ட முதல்வர் அருள்திரு P. M. இம்மானுவேல் அடிகள்

அப், கார்மேல் அலையகத் தலைவி அருள்சகோதரி மாறி லூயிஸ் உட்பட பலர் உரையாற்றினர்.

## நாகர் கோவில்...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் மறையுரையாற்றிய அருள்திரு. ஜெயசீலன் அடிகள் ''எம் மழலை செல்வங்கள் நாசமாக்கப்படவில்லை. மாறாக அவர்கள் இறைவனின் அன்பிலே அவர் கூட மகிழ்ந்திருக்கின்றனர். இவர்களுடைய இரத்தம் ஓர் போதும் வீணாக சிந்தப்படவில்லை. அது இறைவனின் மீட்புக்கு வழிசமைக்கும் ஓர் ஞாபக சின்னமாக என்றும் எம்மத்தியில் அமையும்'' என்று குறிப்பிட்டார்.

இத்திருப்பலிக்கு சில மணிகளுக்கு முன்பு கூட அக்கிராமம் பதற்றமான சூழ்நிலையில் இருந்த போதிலும் அம்மக்கள் கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்ற வேறுபாடின்றி தமது வேதனைகளில் ஒன்றித்தவர்களாக பங்குபற்றியமையும், பிள்ளைகளை இழந்து கதறிய பெற்றோரின் அழுகுரல்கள் அங்கிருந்தவர்களை கலங்கவைத்தமையும் மனதை உருக்கும் நிகழ்வாக அமைந்தது.

## அல்லாரைப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவதின வழிபாடுகள் மிகவும் அர்த்தமுள்ள முறையில் சிறுவர், இளைஞர், யுவதிகள், பெற்றோர் என்று வகுக்கப்பட்டு ஒவ்வொரு நிலையினரும், தம் கடமைகள் பொறுப்புக்கள் என்பவற்றை சிறப்பாக உணரவும், சிந்தித்து செயற்படவும் கூடிய முறையில் மறையுரைகள் ஆற்றப்பட்டது. இந்நவநாட்களின் மறையுரைகளை உதவிப்பங்குத்தந்தை அன்ரன் றொக், அருள்தந்தை ஜெயச்சந்திரன் அருள்தந்தை சூசைநாதன் பங்குத்தந்தை பீற்றர் துரைரட்ணம் ஆகியோர் சிறப்பான முறையில் ஆற்றினார்கள்.

தகவல்:- அ. பிரான்சிஸ்கா

## கல்வி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் அகவிடுதலை தோன்றும், அறிவுத்திமிர் அகலும் என்றும், ஆசிரியர்கள் மாணவர்களாக மாறி உண்மைத் தேடலில் ஈடுபடுவதே எமது இன்றைய சவால் என்றும் செல்வரத்தினம் அடிகளார் எடுத்துரைத்தார்.

## நாட்டுக் கூத்து..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாரும் செயலாளர் திரு. சீ. எம். நெல்சன் அவர்களும், சிறப்புரையாற்றினர். தொடர்ந்து நாட்டுக்கூத்துப் பொறுப்பாளர் ஏ. பாலதாஸ் அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் இனிது நிறைவெய்தியது.

என். மெலானி

## ஆசிரியர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

22ஆம் நாள், மறைக்கல்வி நிலைய மண்டபத்தில் அனைத்துலக ஆசிரியர் தினத்தையொட்டி, யாழ் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவர் திரு ஏ. எஸ். லோறன்ஸ் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் யாழ் ஆயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ் கல்வித் திணைக்கள இரு வலயங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் திரு R. அருளானந்தம், திரு இராசையா ஆகியோரும், யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருள்தந்தைR.H. சகாயநாயகம் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக வருகை தந்து உரையாற்றினர்.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org